நெல்லை கிழக்கு,நெல்லை மத்திய மாவட்டம் கழக இளைஞர் அணி,மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி முன்பு நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசை கண்டித்தும், ஆளுநரை கண்டித்தும் நடைபெற்ற மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார். நிகழ்வில் கழக துணைப் பொது செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்றார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், ஞானதிரவியம் எம். பி.அப்துல் வகாப் எம்.எல்.ஏ உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசு , ஆளுநர் ரவியை கண்டித்து திண்டுக்கல்லில் திண்டுக்கல் மாவட்ட இளைஞரணி மாணவரணி மருத்துவர் அணி சார்பில் நடைபெற்ற உஉண்ணாவிரத போராட்டத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் கண்டன உரையாற்றினார். உடன் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டியம்பலம், துணைச் செயலாளர் நாகராஜன், மாநகர செயலாளர் ராஜப்பா, உட்பட இளைஞர் அணி மாணவர்அணி,மருத்துவ அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்தியா-இலங்கைக்கு இடையே விரைவில் தொடங்கும்!

சர்வதேச பயணிகள் படகுச் சேவைக்கு ஒன்றிய அரசு அனுமதி!

குஜராத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

காந்தி நகர், ஆக.21

கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

19வது கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டம் நேற்று முன்தினம் (19.08.2023) காலை 10.00 மணிக்கு குஜராத் மாநிலம், கெவடியாவில் ஒன்றிய துறை முகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர் வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனவால் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடலோர மாநிலங்களின் துறைமுக அமைச்சர்கள், ஒன்றிய, மாநில அரசுகளின் அலுவலர்கள், கடல்சார் வாரிய அலுவலர்கள் பங்குபெற்றனர்.

தமிழ்நாட்டின் சார்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கு பெற்று உரையாற்றினார்.

துறைமுகங்களுக்கு, சாலை மற்றும் இரயில் இணைப்பு சாகர்மாலா திட்டத்தின் மூலம், நிதியுதவி என்.ஐ.பி. திட்டங்கள் செயல்படுத்துதல், தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம், இந்திய துறைமுகங்கள் சட்டவரைவு, மிதக்கும் தோணித்துறை, கடல் விமான செயல்பாடுகள் மற்றும், இந்திய கடலோர காவல்படை நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல் போன்ற பொருள் தொடர்பாக, இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றும் போதுகுறிப்பிட்டதாவது:-

தீபகற்ப இந்தியா, குறிப்பாக பண்டைய தமிழ்நாடு, தென்கிழக்கு ஆசியா, இலங்கை மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக இணைப்பில், ஒரு முக்கிய மையமாக விளங்கியது. கொற்கை,குலசேகரப்பட்டினம், காயல்பட்டினம், அழகன்குளம், தேவிப்பட்டினம், நாகப்பட்டினம், பூம்புகார், கடலூர், அரிக்கமேடு, மரக்காணம், மாமல்லபுரம், பழவேற்காடு போன்ற பழங்காலத் தமிழகக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க துறை முகங்கள்மற்றும்கோரமண்டல கடற்கரையில் உள்ள பல துறைமுகங்கள், தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் கலாச்சார வரலாற்றில் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றிக்கொண்டிருந்தன.

வ.உ.சிதம்பரனார் அவர்கள் 1906-இல், பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்துடன் போட்டியிட, சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்தை நிறுவினார். கடல்சார் மற்றும் துறை முகத் துறையில் முன்னோடியாக இருக்கும் இந்த பாரம்பரியத்தை தொடரவும். இந்தியாவை தற்சார்புடைய நாடாக மாற்றவும், தமிழ்நாடு சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளும் என தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் நுழைவாயிலுடன் கூடிய தனித்துவமான கடற்கரையைக் கொண்டுள்ளது. அதன் கடல்சார் மற்றும் துறைமுகத் துறையை வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களை மேம்படுத்துவதில் ஒரு செயலூக்கமான மற்றும் தாராளமான அணுகுமுறையை கொண்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் சாகர்மாலாதிட்டத்தின்கீழ், மானியமாக தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு சுமார் ரூ.120 கோடி நிதியுதவி அளித்த ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் இந்திய அரசுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவை சர்வதேச அளவில் இணைக்கும்வகையில் இலங்கைக்கு துவங்கவுள்ள முதன்மை யான படகுச் சேவைக்கு வெளியுறவு அமைச்சகம் பச்சைக்கொடி காட்டியுள்ளது. முன்னெடுக்கப்பட்டுள்ள சர்வதேச பயணிகள் படகு சேவையானது நீண்டகால மாக பகிரப்பட்ட வரலாறு மற்றும் ஆழமான கலாச்சார உறவுகளைக் கொண்ட இவ்விரு நாடுகளுக்கும் பயனளிக்கும்.

இது நாடுகளுக்கிடையே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வர்த்தகத்தையும் மேம்படுத்தும். கூடிய விரைவில் பலன் கிடைக்கும் வகையில், இப்படகு சேவையை விரைவில் தொடங்குவதற்கு நாகப்பட்டினம் துறைமுகம் தயாராகி வருகிறது.

இராமமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையேபடகுசேவையை புதுப்பிப்ப தற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1980ஆம் ஆண்டுகள் வரை செயல்பாட்டில் இருந்த இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பாரம்பரிய கடல்வழிகளை புதுப்பிக்கும் வகையில் இத்திட்டம் இருக்கும்.

கடல் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துவது என்பது பற்றிய ஒருங்கிணைந்த முடிவுகளுக்காக, ஆற்றல், தொழிற்துறை மற்றும் பொழுதுபோக்கு உள்ளிட்ட கடலின் பல பங்காளர்களை ஒன்றிணைக்கும் கடல் இடஞ்சார்ந்த திட்டமிடலில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. கடலோர கடல் வளங்களை பாதுகாப்பது நமது பொறுப்பும், கடமையும் ஆகும். அதன் நீண்ட கடற்கரையை பயன்படுத்தி கடலோர சுற்றுலா, பொழுதுபோக்கு கடல்நீர் விளையாட்டுகளை வழங்குவதன் மூலம் நீல பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்தின் மத்தியில் உள்ள தொழிற்சாலை பகுதிகளுக்கு தேவையான சரக்குகளை கையாளக்கூடிய வகையில், கடலூர் பகுதியில் பெரும்திறன் கொண்ட பசுமை வளத்துறைமுகத்தை உருவாக்கவும், தமிழ்நாடு திட்டமிட்டுள்ளது. ஆண்டோன்றுக்கு 10 மில்லியன் மெட்ரிக் டன் (MMT) சரக்குகளை இத்துறைமுகம் கையாளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாட்டின் சார்பாக, நெடுஞ்சாலைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு கடல்சார் வாரிய தலைமை நிர்வாக அலுவலர் எஸ்.நடராஜன், மற்றும் மாநில துறைமுக அலுவலர் எம். அன்பரசன் ஆகியோர் பங்குபெற்றனர்.

சிறைத்துறை டி.ஜி.பி. அமரேஷ் புஜாரி தலைமையில்

மதுரையில் சிறைவாசிகளால் நடத்தப்படும் பெட்ரோல் நிலையம்!

அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

மதுரை, ஆக.21-

மதுரை புது ஜெயில் சாலையில் புதிதாக கட்டப்பட்ட ப்ரிடம் பெட்ரோல் நிலையத்தை சட்டம், நீதி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். இத்திறப்பு விழாவில் வணிகம் மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பா.மூர்த்தி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ்புஜாரி, மதுரை சரக சிறைத்துறை துணைத்தலைவர் த.பழனி, மதுரை மத்திய சிறை கண்காணிப்பாளர் பொறுப்பு அ.பரசுராமன் மற்றும் ஐ.ஓ.சி.எல். நிறுவன தலைமை நிர்வாக இயக்குநர் வி.சி.அசோகன் மற்றும் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இப்பெட்ரோல் விற்பனை நிலையத்தில் 36 சிறைவாசிகள் பணிபுரிய உள்ளனர். இவர்களுக்கு தினசரி ஊதியமாக ரூ.300 வழங்கப்படும்.

தமிழக சிறைத்துறை மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்துடன் இணைந்து புதிதாக திறக்கப்பட்டுள்ள இந்த பெட்ரோல் நிலையம் தமிழகத்தில் 8வது பெட்ரோல் நிலையமாகும். விரைவில் தமிழகத்தில் உள்ள மற்ற சிறை வளாகங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாடு சிறைத்துறையால் நிர்வகிக்கப்படும் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் பொது மக்களிடையே மிக சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளது. தமிழ்நாடு சிறைத்துறையால் நடத்தப்படும் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படும் பெட்ரோல் / டீசலின் தரம் மற்றும் கண்ணியமான சேவைகளால் தாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை, சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கென கல்வி திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, தொழிற்கூட பயிற்சி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இந்த வகையில் சிறை வளாகங்களில் சிறை அங்காடிகள் தொடங்கிட அரசால் அனுமதி வழங்கப்பட்டு அதில் சிறைவாசிகளால் தயார் செய்யப்படும் பாலி விஸ்கோஸ் துணி (காக்கி மற்றும் வெள்ளை) ஆயத்த ஆடைகள், கைவினைப் பொருட்கள், நோட்புக், பூச்செடிகள், மண்புழு உரம், காய்கறிகள், ஓவியங்கள், மழைக்கோட், செக்கு எண்ணெய் வகைகள், அடுமனைப் பொருட்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (R.O.Water) போர்வைகள், துண்டுகள், தலையணை உறைகள், கால்மிதியடிகள், சணல் பைகள், மரவேலைப் பாடுகளுடன் கூடிய கைவினைப்பொருட்கள் மற்றும் மேஜை, நாற்காலி வகைகள், இரும்பு மேஜை மற்றும் நாற்காலி வகைகள் போன்றவைகள் சிறைவாசிகள் மூலம் தயார் செய்யப்பட்டு சிறை சந்தை மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இச்செயல்பாடுகள் மூலம் சிறைவாசிகள் தினசரி ஊதியம் மற்றும் லாபத்தில் ஒரு பங்குத் தொகையும் பெற்று வருகின்றார்கள்.

சிறை அங்காடிகளின் நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்தும் விதமாக கோவை, புழல், வேலூர், பாளையங்கோட்டை, பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகிய 5 ஆகிய மத்திய சிறைவளாகங்களில் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் தமிழ்நாடு சிறைத்துறையால் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்துடன் இணைந்து நடத்த அரசால் ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டு இந்த பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் ப்ரிடம் பில்லிங் ஸ்டேசன் (Freedom Filling Station) என்ற பெயரில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. 31.03.2023 வரை அனைத்து பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங் களின் மூலமாக ரூ.847.31 கோடி மொத்த விற்பனை செய்யப்பட்டு, இலாபம் ரூ.23.94 கோடி பெறப்பட்டு, சிறை வாசிகளின் ஊதியமாக ரூ. 2.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி

கரூர் மாவட்டத்தில் உண்ணாவிரத அறப்போர்!

மாணிக்கம் - இளங்கோ - சிவகாமசுந்தரி - எம்.செந்தில்நாதன் - முன்னணியினர் பங்கேற்பு!

கரூர், ஆக. 21 -

நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசை கண்டித்தும், கொக்கரிக்கும் ஆளுநரை கண்டித்தும் கரூர் தலைமை அஞ்சலகம் முன்பு மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் இரா இளங்கோ தலைமை வகித்தார். மாவட்ட இளைஞரணி செயலாளர் சக்திவேல் வரவேற்புரையாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரா மாணிக்கம், க.சிவகாம சுந்தரி, மருத்துவ அணி துணைத் தலைவர் எம்.செந்தில்நாதன், நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, மாநில நிர்வாகிகள் முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜயக்குமார்,

கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கனேசன், துணை மேயர் தாரணி பி. சரவணன்,

மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ்பாபு, பி.வி. பாரத், கரூர் மாநகர செயலாளர் எஸ் பி கனகராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜ கோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, பொதுக் குழு உறுப்பினர்கள் வி. கருப்பன்னன், எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.ராஜ்கண்ணு, பி.பி. சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏநஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி, எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம்,

பகுதி செயலாளர்கள் கரூர் கனேசன், க.சுப்பிரமணியன், க.அன்பரசன், ஆர்.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், என்.மணி கண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி.வளர்மதி, எம்.ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம். ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், அ.சந்திரன், இரா.ராமர் Ex.MLA, ஜி. அண்ணாதுரை, பி.முத்துக் குமாரசாமி, வி.கே.வேலுச்சாமி, என்.செல்வராஜ், சி.கதிரவன், எல்.கரிகாலன், ப.தியாகராஜன், பள்ளப்பட்டி பொறுப்பாளர் அ.வாசிப் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் செயலாளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டிய

துணை நிலை ஆளுநர் தமிழ்நாடு அரசியல் பற்றி பேசுவதா?

காரைக்கால் கழக அமைப்பாளர் கேள்வி

காரைக்கால், ஆக. 21-

அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டிய புதுச்சேரி துணை நிலை ஆளுநர், தமிழ்நாடு அரசியல் பற்றி பேசுவதா என்று குறிப்பிட்டு காரைக்கால் கழக அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:-

துணை நிலை ஆளுநர் தமிழை சவுந்தர்ராஜன் அவர்கள் அளித்த விருந்தில் திமுக கலந்து கொள்ளாமல் இருந்தது எதிர்க்கட்சிகளுக்கு தான் நஷ்டம் என்பதைப் போல அவர் குறிப்பிட்டு இருக்கிறார். என்ன நஷ்டம் என்பது எங்களுக்கு தெரியவில்லை?. டெல்லியில் ஆளுகிற ஒரு யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு ஆட்சி கோரும் உரிமைகளை தடுத்து ஒரு ஜனநாயக படுகொலையை செய்துவிட்டு இங்கே சுதந்திர தின விழாவை கொண்டாடுவது என்பது ஒரு மனிதனை கொன்றுவிட்டு அந்த பிணத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு இனிப்பு சாப்பிடுவதற்கு சமம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் உரிமையை பறிப்பது என்பது எவ்வளவு பெரிய கொடூர செயல் என்பதை துணைநிலை ஆளுநர் உணர வேண்டும். அதே நிலை தான் புதுச்சேரி மாநிலத்திலும் ஒரு சட்டமன்றம் கூடி 30 சட்டமன்ற உறுப்பினர்களும் புதுச்சேரி மாநிலத்திற்கு மாநில அந்தஸ்து வேண்டும் என்று கோருகிற அந்த தீர்மானத்தை அனுப்பாமல் இருந்து தமிழகத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சுப்பராயன் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்ட பிறகு அவர் எந்தவிதமான தன்னுடைய குறிப்புகளையும் எழுதாமல் அப்படியே டெல்லிக்கு அனுப்பி இருப்பதாக நான் செய்திகளை அறிகிறேன்.

ஒரு சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை அனுப்புவதற்கு கூட தயங்குகிறார் என்றால் இது ஜனநாயகத்தை மீறிய செயல் அல்லவா? இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று தெரியவில்லை. நான் தமிழ்நாடு மண்ணில் பிறந்த காரணத்தினால் அந்த மாநில அரசியலைப் பற்றி பேசுகிறேன் என்று கூறுகிறார்.

எங்களுடைய புதுச்சேரி மாநிலத்தில் நாங்கள் வசிக்கிற காரைக்கால் பகுதியில் பிறந்தவர் தான் மறைந்த பாரூக் மரைக்காயர், அவர் இரண்டு மாநிலத்தினுடைய (ஜார்க்கண்ட், கேரளம்) கவர்னராக இருந்திருக்கிறார். அவரை தமிழ்நாடு அரசியல் குறிப்பாக புதுச்சேரி அரசியல் தொடர்பான கேள்விகளை பத்திரிக்கையாளர்கள் கேட்கின்ற பொழுது , நான் அதற்கெல்லாம் பதில் சொல்ல கூடிய நிலையில் இல்லை. காரணம் நான் வகிக்கக்கூடிய பொறுப்பு அப்படி. நான் வகிக்கின்ற பொறுப்பின் மாண்பை காக்க வேண்டும் என்று அந்த மாண்பையும் காப்பாற்றியவர், தனி மனித பண்பாட்டுக்குரியவர் மரியாதைக்குரிய பாருக் மரைக்காயர்

அதேபோல நீங்களும் இருந்தால் நாங்களும் பேசப் போவதில்லை. எனவே நீங்களும் உங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து நீங்கள் செயல்பட்டால் உங்களுக்கு உரிய அங்கீகாரத்தை நாங்களும் கொடுக்க தயார். இன்னும் சொல்லப்போனால் ஒரு அரசியல்வாதியாக இருக்கக்கூடிய புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள் கூட எங்கள் தலைவர் தளபதி அவர்களின் ஆட்சியை ஒரு வார்த்தை கூட குறை சொல்லியதில்லை காரணம் அவர் தளபதியின் ஆட்சியை உணர்ந்து இருக்கிறார்.

அப்படிப்பட்ட முதலமைச்சரே விமர்சிக்க முடியாத ஆட்சி அங்கே நடக்கின்ற பொழுது அரசியலுக்கு அப்பாற்பட்டு நிர்வாகத்தை செய்யக்கூடிய நீங்கள் வாய் திறந்து எங்களுடைய ஆட்சியை விமர்சனம் செய்கின்ற பொழுது நாங்கள் எப்படி பொறுத்துக் கொள்வோம் என்பதை மட்டும்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் நீங்கள் தவிர்த்துக் கொள்வது உங்களுக்கும் நீங்கள் வகிக்கக் கூடிய பொறுப்பிற்கும் அழகு என்பதை நாங்கள் கண்ணிய தொடு தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு நாஜிம் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் தெற்கு வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் ,மாணவர், மருத்துவ அணிகளின் சார்பில் நீட் தேர்வை கண்டித்து உண்ணாவிரதப் போராட்டத்தை விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் தொடங்கிவைத்தார். தெற்கு மாவட்ட. இளைஞர் அணி அமைப்பாளர் தனுஷ்குமார் எம்.பி. உடன் இளைஞர் அணி கிருஷ்ணகுமார், கார்த்தி மருத்துவ அணி திலகவதி Dr.சண்முகராஜ், செல்வராணி மற்றும் ஏராளமான அணியினர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்ட இளைஞரணி மாணவரணி மருத்துவரணி சார்பில் ஒன்றிய அரசின் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஒன்றிய அரசையும் ஆளுநரைக் கண்டித்தும் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் குமரிகிழக்கு மாவட்ட செயலாளரும் மேயருமான ரெ.மகேஷ் முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் மாநில துணை அமைப்பு செயலாளர் ஆஸ்டின்முன்னாள் எம்.பி. ஹெலன்டேவிட்சன் முன்னாள் எம்.எல்.ஏ. ராஜன் புஷ்பலீலாஆல்பன் எப்.எம்.ராசரத்தினம் துணை மேயர்மேரிபிரின்சிலதா இளைஞரணி அமைப்பாளர்கள் அகஸ்தீசன் ஜெகநாதன் மாணவரணி அருண்காந்த் மருத்துவரணி வள்ளுவன் சுரேஷ் மாநகர செயலாளர் ஆனந்த் சிடி சுரேஷ் மற்றும் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.